வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: மலர்விழி

நாள்: 22.11.2024 நேரம்: மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

**நாட்டிற்கே முதலிடம்** என்னும் அணுகுமுறையை அனைத்து மக்களும் பின்பற்றினால்தான் முன்னேறிய இந்தியாவை உருவாக்க முடியும் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

மஹாராஷ்ட்ரா மற்றும் ஜார்கண்டில், நாளை நடைபெற உள்ள, **சட்டமன்றத் தேர்தல் வாக்கு எண்ணும் பணி**களுக்கான எல்லா ஏற்பாடுகளும் செய்து முடிக்கப் பட்டுள்ளன.

புதுச்சேரியில் நடைபெறும் **கியான் கும்ப்** என்னும் **3 நாள் தேசிய கல்வியியல் மாநாட்டை**, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் இன்று முறைப்படி தொடக்கி வைத்தார்.

தென்கிழக்கு வங்கக் கடலில் நாளை, **காற்றழுத்தத் தாழ்வு பகுதி** உருவாகக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

---

*முர்மு 1 (19)*

**நாட்டிற்கே முதலிடம்** என்னும் அணுகுமுறையை அனைத்து மக்களும் பின்பற்றினால்தான் முன்னேறிய இந்தியாவை உருவாக்க முடியும் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார். இன்று ஹைதராபாத்தில், **லோக் மந்தன்** என்னும் **சர்வதேச கலாச்சார விழா**வை தொடக்கி வைத்து பேசிய அவர், நாட்டின் கலாச்சார மற்றும் அறிவுப் பாரம்பரியத்தை அனைவரும் புரிந்து கொண்டு, **விலைமதிப்பற்ற இந்திய மரபு**களை வலுப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார். நாட்டின் அடிப்படை ஒற்றுமைக்கு அடிநாதமாகத் திகழ்வதே, நமது **பன்முகத் தன்மைதான்** என்றும், தேசிய ஒற்றுமை என்னும் உணர்வுதான், பல சவால்களுக்கு இடையிலும், நம் அனைவரையும் **ஒன்றுபடுத்தி வைத்து இருப்ப**தாகவும், குடியரசுத் தலைவர் கூறினார். பல நூற்றாண்டுகளாக பொருளாதார ரீதியில் இந்தியாவை சுரண்டிய, **ஏகாதிபத்திய மற்றும் காலனிய சக்தி**கள், இந்திய சமூகத்தை பிளவுபடுத்தவும் பல முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், இம்முயற்சிகள் பலிக்கவில்லை என்றும், செயற்கையான

இத்தகைய வேறுபாடுகளால், மக்களின் ஒற்றுமையை பிளக்க முடியாது என்றும், அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் பாரம்பரிய தத்துவங்கள், பழங்காலத்தில் இருந்தே, உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவி, முக்கிய தாக்கம் ஏற்படுத்தி இருப்பதையும், இந்தியக் கலை, கல்வி, இலக்கியம், மருத்துவ

*முர்மு* 2 (10)

முறைகள்,மற்றும் மத நம்பிக்கைகளை உலகமே போற்றி வருவதையும் குடியரசுத் தலைவர் சுட்டிக் காட்டினார். **இலட்சிய வாழ்க்கைக்கான** அடிப்படை நற்பண்புகளை, உலக சமுதாயத்திற்கு வழங்கியதே, **இந்திய தத்துவ முறைகள்**தான் என்று கூறிய அவர், முன்னோர்கள் வகுத்துக் கொடுத்த **இம்மகத்தான பாரம்பரியத்தை** வலுப்படுத்துதல், அனைவரின் கடமை என்றார்.

இவ்விழாவில், தெலங்கானா ஆளுநர் திரு. ஜிஷ்ணுதேவ் வர்மா, மத்திய அமைச்சர் திரு. கிஷண் ரெட்டி, ஆர்.எஸ்.எஸ் **சர் சங் சாலக்** திரு. மோகன் பகவத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இவ்விழாவை தொடர்ந்து, குடியரசுத் தலைவர், தமது 2 நாள் ஹைதராபாத் பயணத்தை முடித்துக் கொண்டு, **பேகம்பேட்** விமான நிலையத்தில் இருந்து, புதுடெல்லி திரும்பினார்.

-------------------------

*மோடி சந்திப்பு* (11)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நைஜீரியா, பிரேசில், கயானா ஆகிய 3 நாடுகளுக்கான தமது 5 நாள் பயணத்தின் போது, 31 இருதரப்பு கூட்டங்களிலும், உலகத் தலைவர்களுடன் சாதாரண முறையிலான பல்வேறு சந்திப்புகளிலும், பங்கேற்றுள்ளார். பிரேசிலில் நடைபெற்ற ஜி-20 உச்சி மாநாட்டின் நிகழ்வுகளுக்கு இடையே, பிரதமர் நடத்திய 10 இருதரப்பு கூட்டங்களும் இதில் அடங்கும். இதில் இந்தோனேஷிய அதிபர் திரு. பிரபாவோ சுபியந்தோ, போர்ச்சுக்கல் பிரதமர் திரு. லூயிஸ் மாண்டிநீக்ரோ, இங்கிலாந்து பிரதமர் திரு. கீயர் ஸ்டார்மர், சிலி அதிபர் திரு. கேப்ரியேல் போரிக், அர்ஜென்டினா அதிபர் திரு. ஜேவியர் மிலியி ஆகியோரை பிரதமர் திரு. நரேந்திர மோடி முதல் முறையாக சந்தித்து இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

-------------------------

*வேலை வாய்ப்பு* 1 (18)

மத்திய கல்வி மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா இன்று புதுடெல்லியில், உங்களுக்கான வேலை-உங்கள் வீட்டு

வாசலில் என்னும் ஆய்வறிக்கையை வெளியிட்டார். 6 மாநிலங்களின் வேலை வாய்ப்பு நிலவரங்களை ஆராய்ந்து, இந்த அறிக்கையை தயாரித்துள்ள, உலக வங்கிக் குழுவினரை, அவர் பாராட்டினார். வேலை வாய்ப்புகள், மற்றும், வேலை வாய்ப்பிற்கு ஏற்ற திறன்கள் பற்றிய, ஆழமான இத்தகைய ஆய்வுகளால், இளைஞர்களின் அதிகாரப் பங்கேற்பிற்கான முற்போக்குக் கொள்கைகளை உருவாக்க உதவிகரமாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார். இத்தகைய அறிக்கைகளை தயாரிப்பதில், அகில இந்திய அடிப்படையில் இக்குழுவினர் செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அண்மைக் காலங்களில், புதிய தொழில்நுட்ப மாற்றங்கள் காரணமாக, வேலை வாய்ப்புகள், மற்றும் பொருளாதார செயல்பாடுகளின் தன்மை மாறி வருவதால், வேலை, மற்றும் வேலை வாய்ப்பு என்றால், என்ன என்பது பற்றிய வரையறையை அகலமாக்குதல் அவசியம் என்று, அமைச்சர் வலியுறுத்தினார். எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ற திறன் மேம்பாடு, மற்றும் மறுதிறன் மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

*வேலை வாய்ப்பு* 2 (6)

அந்தந்த பிராந்தியங்களில் கிடைக்கும் திறன்கள், மற்றும் வேலை வாய்ப்புகளின் உள்ளாற்றலை முழுமையாக பயன்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற பாடத் திட்டங்களை உருவாக்கும் உத்தேசம், மத்திய அரசின் பட்ஜெட்டில் இடம்பெற்றதை, அமைச்சர் தமது உரையில் சுட்டிக் காட்டினார். முறைப்படியான கல்வியில், முறைசாரா கல்வியையும் உள்ளடக்கி மேம்படுத்துதல் அவசியம் என்று, அவர் வலியுறுத்தினார்.

-------------------------

*வாக்கு எண்ணிக்கை* (10)

மஹாராஷ்ட்ரா மற்றும் ஜார்கண்டில், நாளை நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் வாக்கு எண்ணும் பணிகளுக்கான எல்லா ஏற்பாடுகளும் செய்து முடிக்கப் பட்டுள்ளன. மஹாராஷ்ட்ர மாநிலத்தின் அனைத்து 288 தொகுதிகளிலும், வாக்குகளை எண்ணி முடிக்க, அதே எண்ணிக்கையில், வாக்கு எண்ணும் மையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு வாக்கு எண்ணிக்கை மையத்திலும் பணிகளை கண்காணிக்க, தலா ஒரு பார்வையாளரை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது. ஜார்கண்டில், அனைத்து 24 மாவட்ட தலைநகரங்களிலும், வாக்கு எண்ணிக்கை மையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இருமாநிலங்களிலும், வாக்கு எண்ணிக்கை மையங்களைச் சுற்றி, 3 அடுக்கு பாதுகாப்பு போடப் பட்டுள்ளது.

-------------------------

*கியான் கும்ப்* 1 (18)

அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி சபை, மற்றும், கல்வி-கலாச்சார மேம்பாட்டு அறக்கட்டளையுடன் இணைந்து, புதுச்சேரி பல்கலைக் கழகத்தால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, **கியான் கும்ப்** என்னும் தேசிய கல்வியியல் மாநாட்டை, இன்று புதுச்சேரியில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன்

முறைப்படி தொடக்கி வைத்தார். நவீன அறிவியல்-தொழில்நுட்ப கல்வியிலும், வேலை வாய்ப்பு, நீதித் துறை மற்றும் நிர்வாகத்திலும், இந்திய மொழிகளின் பயன்பாட்டை அதிகரிக்க, அவசரத் தேவை இருப்பதாக, அவர் தமது உரையில் கூறினார். நவீன தொழில்நுட்பங்களை இந்திய மொழிகள் மூலம் மேம்படுத்த வேண்டியதும், இதற்கான உள்ளடக்கத் தேவைகளை இந்திய மொழிகள் மூலம் நிறைவேற்ற வேண்டியதும் அவசியம் என்று அவர் வலியுறுத்தினார். சமூக-பொருளாதார மற்றும் புவியியல் ரீதியிலான விளிம்புநிலை மக்களை சமூகத்துடன் ஒருங்கிணைப்பதில், புரட்சிகரமான பங்களிப்பதாக, கல்வி அமைய வேண்டும் என்று துணை நிலை ஆளுநர் கூறினார். காலனி ஆதிக்க கால கல்வி முறையில் இருந்து, முழுமையான வளர்ச்சிக்கான கல்வி முறைக்கு மாறுதல் அவசியம் என்றும் அவர் கூறினார்.

சமூகத்தின் பல்வேறு பிரிவு மக்களுக்கு இடையே சமாதான சகவாழ்வை ஊக்குவித்தல், நற்பண்புகளின் அடிப்படையிலான குடும்ப வாழ்க்கையை போற்றுதல், தனிப்பட்ட மனிதர்களின் வாழ்க்கை முறையை

*கியான் கும்ப் 2 (18)*

சுற்றுச் சூழலுக்கு ஏற்றதாக மாற்றுதல், நாட்டின் உற்பத்தி மற்றும் நுகர்வு நடைமுறைகளில் நீடித்த தன்மையை உறுதிப்படுத்தல், பொறுப்பான குடிமக்களாக இருக்க வேண்டும் என்ற உணர்வை மக்களிடையே வலுப்படுத்துதல் ஆகிய 5 முக்கிய அம்சங்களையும் அவர் வலியுறுத்தினார்.

புதுச்சேரியை, இந்திய மொழிகளின் ஒற்றுமைக்கான மையமாகவும், தேசிய கல்விக் கொள்கையின் அமலாக்கத்திற்கான முன்மாதிரி மாநிலமாகவும், மேம்படுத்த வேண்டும் என துணை நிலை ஆளுநர் கூறினார். சர் சி.வி.ராமன், ஸ்ரீனிவாச ராமானுஜன், ஏ.பிஜே அப்துல்கலாம் போன்ற உலகத்தரம் வாய்ந்த இந்திய அறிஞர்களுடன் பல்வேறு துறைகளில் இன்றைய சாதனையாளர்களின் வெற்றிக் கதைகளையும், இளம் தலைமுறையினர் அறிந்து கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

WAVES என்னும் உலக ஒலி-ஒளி மற்றும் கேளிக்கை உச்சிம மாநாட்டின் ஒருபகுதியாக, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சகம் சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, Create India சவால் போட்டியில், மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் துணை நிலை ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

மாநில கல்வி அமைச்சர் திரு. நமச்சிவாயம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர்.

*கியான் கும்ப் 3 (5)*

செல்வம், புதுச்சேரி பல்கலைக் கழக பொறுப்பு துணைவேந்தர் டாக்டர் தரணிக்கரசு, கல்வி-கலாச்சார மேம்பாட்டு அறக்கட்டளை அமைப்பின் தேசிய

செயலர் டாக்டர் அதுல் கோத்தாரி, மயிலம் **பொம்மபுர ஆதீனம் சிவஞான பாலய சுவாமிகள்**, கோவை **சிரவையாதீனம் கௌமார மடத்தைச்** சேர் ந்த **ராமநாத குமரகுருபர சுவாமிகள்** உட்பட பலர் கலந்து கொண்டனர்.

-------------------------

*திரைப்பட விழா* (13)

கோவாவில் நடைபெறும் 55ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவின் ஒருபகுதியாக, தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள **ஃபிலிம் பஜார்** சந்தையில், இந்தியா மற்றும் பல்வேறு நாடுகளில் இருந்து, திரைப்பட இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், வினியோகஸ்தர்கள் உட்பட பல்வேறு தரப்பினர் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர். திரைப்படத் துறையினர், ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டு, பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பாக இந்நிகழ்வு அமைந்துள்ளது. இந்தியத் திரைப்படங்களை, வெளிநாட்டு தயாரிப்பு நிறுவனங்களுடன் இணைந்து தயாரிக்கவும், சர்வதேச அரங்கில் இந்திய திரைப்படங்களுக்கு இடம்பெற்றுத் தரவும், **ஃபிலிம் பஜார்** நிகழ்வுகள், பெருமளவில் உதவி வருகின்றன. இந்தியாவிற்கும், உலக நாடுகளுக்கும் இடையே, கலாச்சார மற்றும் தொழில்முறை பரிமாற்றங்களுக்கான மையமாக, இந்நிகழ்வு அமைவதும் குறிப்பிடத்தக்கது.

-------------------------

*சிபிஎஸ்இ* (12)

மத்திய இடைநிலைக் கல்வி வாரியம், குடும்பத்தில் ஒரே பெண் குழந்தையாக உள்ள மாணவிகளுக்கு தகுதி அடிப்படையில் கல்வி உதவித் தொகை வழங்குவதற்கான விண்ணப்பங்களை வரவேற்றுள்ளது. நடப்பாண்டில், சிபிஎஸ்இ பாடத் திட்டத்தில் 10ஆம் வகுப்பு முடித்து, தற்போது, சிபிஎஸ்இ பள்ளிகளில், 11ஆம் வகுப்பு பயிலும் தகுதி உள்ள மாணவிகள், அடுத்த மாதம் 23ஆம் தேதிக்குள், ஆன்-லைன் மூலம் இதற்கு விண்ணப்பிக்கலாம். இதே திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டு கல்வி உதவித் தொகை பெற்றவர்கள், இவ்வாண்டில் அதை புதுப்பித்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களையும், ஆன்-லைன் முறையில் சமர்ப்பிக்கலாம் என, மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் அறிவித்துள்ளது. தகுதி நிபந்தனைகள், மற்றும் இதர விவரங்களுக்கு, சிபிஎஸ்இ இணைய தளத்தை அணுகலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------

*வானிலை* (14)

தென்கிழக்கு வங்கக் கடலில் நாளை காற்றழுத்தத் தாழ்வு பகுதி உருவாகக் கூடும் என்றும், அதற்கு அடுத்த 2 நாட்களில், இது, மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, தெற்கு வங்கக் கடலில், காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும் என்றும், சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுஅல்லாது, தெற்கு அந்தமான் கடல் பகுதியல் இருந்து, மன்னார் வளைகுடா வரை, வளிமண்டல கீழடுக்கு சுழற்சியும் நிலவுவதால், தமிழகத்திலும், புதுச்சேரி-

காரைக்கால் பகுதிகளிலும், மழை நீடிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. மீனவர்கள் ஆழ்கடல் பகுதிகளில் மீன்பிடிக்கச் செல்வதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், தென்தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில், பெரும்பாலான இடங்களிலும், வடதமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் ஒரிரு இடங்களிலும், மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக, ராமநாதபுரம் மற்றும் திருச்செந்தூரில், தலா 6 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

--------------------------

*கிரிக்கெட்* (6)

இந்திய-ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையே, ஆஸ்திரேலியாவின் பெர்த் நகரில் நடைபெறும், **பார்டர்-கவாஸ்கர் கோப்பைக்கான** முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் தொடக்க நாளான இன்று, ஆட்ட நேர இறுதி வரை, ஆஸ்திரேலிய அணி, தனது முதலாவது இன்னிங்சில், 7 விக்கெட் இழப்பிற்கு, 67 ரன் எடுத்து இருந்தது. முன்னதாக, டாஸ் ஜெயித்து முதலில் ஆடிய இந்திய அணி, 150 ரன்னுக்கு, முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை இழந்தது.

--------------------------

*தக்காளி* (14)

தக்காளி வினியோகச் சங்கிலியின் முக்கிய பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் நோக்கிலான Tomato Grand Challenge போட்டியின் கீழ் மத்திய அரசு, 28 திட்டங்களை தேர்வு செய்துள்ளது. கடந்த ஆண்டு தொடக்கப்பட்ட இப்போட்டிக்கு, மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில்துறையினர் மற்றும் ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் உட்பட, பல்வேறு தரப்பினரிடம் இருந்து, ஆயிரத்து 376 கருத்து யோசனைகள் பெறப் பட்டதாக, மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறைச் செயலர் திருமதி நிதி கரே, இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 28 உத்தேசங்களுக்கு நிதி, மற்றும், ஆலோசனை உதவிகள் வழங்கப் படுவதாகவும், அவர் கூறினார். தக்காளி வினியோகச் சங்கிலியின் அறுவடைக்கு முன்பும், பின்பும் ஏற்படக் கூடிய பல்வேறு பிரச்சனைகளுக்கும், தக்காளி பதனீடு, மற்றும், சந்தைத் தகவல் தொடர்பான பல்வேறு பிரச்சனைகளுக்கும் தீர்வுகாண இதனால் ஏதுவாகும் என்று அவர் தெரிவித்தார்.

--------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

**நாட்டிற்கே முதலிடம்** என்னும் அணுகுமுறையை அனைத்து மக்களும் பின்பற்றினால்தான் முன்னேறிய இந்தியாவை உருவாக்க முடியும் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

மஹாராஷ்ட்ரா மற்றும் ஜார்கண்டில், நாளை நடைபெற உள்ள, **சட்டமன்றத் தேர்தல் வாக்கு எண்ணும் பணி**களுக்கான எல்லா ஏற்பாடுகளும் செய்து முடிக்கப் பட்டுள்ளன.

புதுச்சேரியில் நடைபெறும் **கியான் கும்ப்** என்னும் **3 நாள் தேசிய கல்வியியல் மாநாட்டை**, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் இன்று முறைப்படி தொடக்கி வைத்தார்.

தென்கிழக்கு வங்கக் கடலில் நாளை, **காற்றழுத்தத் தாழ்வு பகுதி** உருவாகக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.